1975 மார்ச் 19]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நம்முடைய இந்திய மருத்துவத்தில் பழங்காலச் சிறப்பு இருக்கிறது. ஆகவே இனிமேலாவது மறுபரிசீலனை செய்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்கினால் பொதுமக்களுக்கும் வசதியாக இருக்குமே. மேலும் மாணவர்களும் மருத்துவம் படிக்க நிறைய சேருவார்கள். ஆகவே, அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏற்கெனவே, ஒரு கல்லூரி பாளையங்கோட்டையில் நடந்து வருகிறது. இன்னொரு கல்லூரி சென்னையிலே துவக்கப்படலாம் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு எண்ணம் இருந்தது. அதற்குப் போதிய தகுதி பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது கடினம் என்ற காரணத்தினாலேயும், குறைந்த அளவு 50 இலட்சம் ரூபாயாவது ஒதுக்கினால்தான் ஒரு கல்லூரி தரம் உள்ளதாக அமையும் என்ற காரணத்தினாலேயும் அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆனால் சித்த மருத்துவர்கள் பயிற்சியாலேயும், பரம்பரை முறையாலேயும் மருத்துவம் செய்து வருபவர்களுக்கு ஒரு பயிற்சி வாய்ப்பு என்ற முறையில் பழனி அறங்காவலர் குழுவின் சார்பில் மூன்று மாதப் படிப்பு அவர்களின் விருப்பத்திற்கேற்ப வழங்கப்படலாம் என்ற ஆலோசனை வழங்கப்பட்டு, அவர்கள் முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப்பிறகு—இப்பொழுதுள்ள பட்டப்படிப்பு 4 ஆண்டுக்காலம், ஒரு ஆண்டுக்காலம் பயிற்சி ஆக 5 ஆண்டுகள் இருக்கின்றன, 3 ஆண்டுக்கால டிப்ளமா வகுப்பு பயிற்சியை ஆரம்பிக்கலாமா என்று அறங்காவலர் குழு தொடங்கும் கல்வி நிலையத்தில் செய்யலாமா என்பதும் ஆராயப்பட்டு வருகிறது. ஒருவேளை அவர்கள் செய்யக்கூடும்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுது இயற்கை சிகிச்சை முறை என்பது இந்தியாவிலே இதர மாநிலங்களிலே பல இடங்களில் நடப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாகக் கல்லூரிகளும் நடப்பதாகத் தெரிகிறது. ஆனால் நமது மாநிலத்தில் அப்படியிருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இயற்கை வைத்திய முறை சம்பந்தமாக இங்கே கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இயற்கை மருத்துவ முறையை எப்படிக் கையாள வேண்டும், அதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி அறிய ஒரு குழு அருணாசலம் அவர்களின் தலைமையின் கீழ்—இனிஷியல் எனக்கு நினைவு இல்லை—அவர்கள் காதி முதலியவற்றில் தொடர்பு உடையவர்கள்—அந்தக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது. அது அரசுக்கு இரண்டு திங்களுக்கு முன்னால் வந்திருக்கிறது. பொதுவாக, இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சியின் வேகம் வேகமாக இருப்பதனால், இருக்கின்ற மனப்பான்மையில் பார்த்தால் இயற்கை மருத்துவம் செய்யப்படுவது என்பதை மக்கள் உடனே வரவேற்று விட மாட்டார்கள். வசதி

யுள்ளவர்கள், தெளிவு உள்ளவர்கள், வேறு சில வாய்ப்புகள் தங்களுக்கு இருந்தும் பிடிக்கவில்லை என்று கருதுபவர்கள், இப்படிப்பட்ட இவர்கள்தான், யோகம், இயற்கை வைத்தியம் என்ற இப்படிப்பட்ட முறைகளில் ஈடுபாடு காட்டுவார்கள். இருந்தாலும் இயற்கை மருத்துவ முறைக்கு ஒரு சிறப்பிடம் வழங்கப்பட என்ன செய்யலாம் என்பது ஆலோசனையிலே இருக்கிறது.

உணவு பகுப்பாய்வுக் கூடங்கள்

*375 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உணவுப்பொருளில் உள்ள கலப்படத்தைக் கண்டு அறியும் சோதனைச் சாலைகளை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) உணவு பகுப்பாய்வுக் கூடங்கள் இரண்டினை, ஒன்று தஞ்சாவூரிலும், மற்றொன்று மதுரையிலும் கட்டுவதற்காக ஒவ்வொன்றிலும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அளவு தொகை 1973 ஆம் ஆண்டில் மாநில அரசால் வழங்கப்பட்டது. அதற்கான வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர மேலும் இரண்டு ஆய்வுக் கூடங்களை (சேலத்திலேயும், பாளையங்கோட்டையிலேயும்) வருகிற ஆண்டில் ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்று அரசினிடத்திலே இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, குறிப்பாக சென்னை மாநகரத்திலே சில இடங்களில் உணவுப்பண்டங்கள் கலப்படம் செய்யப்பட்டு கலப்படமாகவே விற்கப்படுகிறது. இதனைக் கண்டறிந்து உடனுக்குடன் பரிகாரம் காண்பதற்காக, நடமாடும் நிலையங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன அந்த வகையிலே உருவாக்கித் திடீர் திடீரென்று சோதனை செய்வதன் மூலம் வெளியூர்களிலேயிருந்து வருகின்ற எங்களைப் போன்றவர்களைப் காப்பாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாக் கடைகளிலேயும் பண்டங்களை வாங்கியிருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன். எல்லாக் கடைகளிலேயும் அப்படி இருப்பதாகக் கூறுவதும் தவறான கருத்து எத்தனையோயிடங்களில் பொறுப்பை உணர்ந்து நடத்தப்படும் நிலையங்கள்